ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2100/25 - 2018 දෙසැම්බර් මස 06 වැනි බ්‍රහස්පතින්දා - 2018.12.06

*2100/25 ஆம் இலக்கம் - 2018 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 06 ஆந் திகதி வியாழக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

**(175 ஆம் அத்தியாயமான) யாத்திரைக் கட்டளைச் சட்டம்**

*சதாதுக கரண்டுவ உடன் ஸ்ரீ சுமன சமன் சிலையை ஸ்ரீபாத மலை வரை (காவிச் செல்வதற்கு) எடுத்துச் செல்வதற்கான ஊர்வலம் - 2018-2019*

*உலகம் முழுவதிலுமான பௌத்த தத்துவார்த்தம் 8 வருடங்களுக்குப் பின்னர் சப்ரகமுவ பரிபாலனத்தில் உள்ள சுமன தேவ பேரரசரின் அழைப்பின் மீது ஸ்ரீபாத மலை உச்சியில் ஸ்ரீபாத இலச்சினையைப் பதித்து இலங்கையைப் பரிசுத்தப்படுத்துவதாகுக. அவ்விடத்திலிருந்து ஸ்ரீபாத மலை உலக வணக்கஸ்தலமாகுக. அப்பொழுதிலிருந்து இராசராச மாவரசரினால் புனிய பாதயாத்திரை நடைபெறும்.*

*சப்ரகமுவ மாகாணத்தில், இரத்தினபுரி திசையில் நவதுன் கோரளையில் பெல்மதுல்ல குட்டபிட்டிய விகாரை கிராமத்தில் அமைந்துள்ள கல்பொத்தாவெல ஸ்ரீபாத ரஜ மகா விகாரையில் அகால பருவத்தில் சுமன சமன் தேவச்சிலையை இருப்புச் செய்து புத்த பூசைகள் நடத்தும் தேவமான்யமாக அமைக்கப்பட்டுள்ளது.*

*1. 2018 ஆம் ஆண்டு உன்துவப் மாதம் பஸலொஸ்வக போயா தினத்திற்கு முன்னர் சதாதுக கரண்டு உடன் சமன்தேவச் சிலையை கல்பொத்தாவில ஸ்ரீபாத ரஜமகா விகாரையில் இருந்து ஸ்ரீபாத மலை உச்சிக்கு காவிச் செல்லும் ஊர்வலம் கீழ்க்குறிப்பிடப்பட்டபடி சுப நேரத்தில் ஆரம்பிக்கப்படும்.*

* *2018.12.20 ஆந் திகதி பி. ப. 6.19 மணியில் இருந்து 2018.12.21 ஆந் திகதி மு. ப. 4.30 மணிவரை தேவச் சிலையை நிராவரணம் பண்ணப்பட்டு பக்தர்களின் புத்த பூசை வழிபாடுகளைச் செய்தல்.*

* *2018.12.21 ஆந் திகதி ஸ்ரீபாத ரஜமகா விகாரையில் இருந்து அதிகாலை ஊர்வலம் ஆரம்பிக்கப்படும்.*

*(1) அதிகாலை 5.20 மணிக்கு கல்பொத்தாவெல ஸ்ரீபாத ரஜமகா விகாரையில் இருந்து குருவிட்ட, எஹெலியகொட, அவிஸ்ஸாவலை, தெஹிஓவிட்ட, கரவனெல்ல, யட்டியன்தொட்டை, அம்பகமுவை, ஹட்டன்-மஸ்கெலிய ஊடாக ஹட்டன் பாதை வழியாக நல்லதண்ணியில் அமைந்துள்ள உத்தியோகபூர்வ ஆராமய வரை வாகன ஊர்வலம் நடத்துதல்.*

1A - G 29056 — 17 (2018/12)

இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

(2) அதிகாலை 6.19 மணியிலிருந்து கல்பொத்தாவெல ஸ்ரீபாத ரஜமகா விகாரையில் இருந்து பெல்மடுல்லை நகரம், ரில்ஹேன, கனேகம, மிதிகஹமுல்லை, பாதகட, போகொடஅரம்ப, சன்னஸ்கம, திப்பிடிகல, லெல்லோபிட்டிய, வெலிமலுவை, பத்துல்பான, பெல்வாடிய, திரிவானகெடிய, பட்டுகெதர, வரகாத்தொட, குடுகள்வத்தை, நகர சபை, புலுங்குபிட்டிய, பண்டாரநாயக்க மாவத்தை, மொரகஹயட்ட, கல்கடுவ, சபரகமுவ மகா சமன் தேவாலயத்துக்கு சென்று மீண்டும் மொரகஹயட்ட கல்கடுவ, ஜூலியன்கஸ்லங்க, வெரிலுப்பெ சந்தி, புதிய நகரம் அங்தனமெத் நாஹிமி விகாரை அருகாமை சந்தி வரை, சீவலீ வித்தியாலயம் அருகாமையில் தொழில்நுட்ப வித்தியாலயம், பாம் கார்டன் சந்தி, மீண்டும் புதிய நகரம் பாதையினூடாக மொரகஹயட்ட சந்தி பஸ் தரிப்பிட பாதை, குடுகல்வத்தை, ஸ்ரீ பலாபத்தல மாவத்தை வீதி, கொடிகமுவ மஹவல வத்தை, மல்வல பாதை வழியாக ஸ்ரீ பலாபத்தல விகாரை வரைக்கும் வாகன ஊர்வலம் நடத்துதல்.

(3) அதிகாலை 7.20 மணிக்கு கல்பொத்தாவெல ஸ்ரீபாத ரஜமகா விகாரையில் இருந்து பெல்மடுல்லை நகரம், பத்கங்கொடை, மீகஹகொடை, காமரங்காபிட்டிய, ரம்புக்க, மொரதொட்டை, ஹுனுவலை, தெல்கஸ்காவ, ஒப்பனாயக்க, உடவலை, எல்லெபொல, பலாங்கொட, தும்பகொடை, ஒலுகன்தொடை, எல்லெஅராவை சந்தி, பின்னவலையினூடாக பொல்தும்பே சமன் விகாரைக்குச் சென்று மீண்டும் பகவன்தலாவை பாதை வழியாக மஸ்கெலிய ஊடாக நல்லதண்ணியில் அமைந்துள்ள உத்தியோகபூர்வ ஆராமய வரை வாகன ஊர்வலம் நடத்துதல்.

அதன் பின்னர் ரஜ மாவத்தை வழியாக ஹட்டன் வீதி வழியாக ஸ்ரீபாத மலுவ வரை சதாதுக கரண்டு உடன் தேவச்சிலையை ஸ்ரீபாத மலை வரை காவிச்சென்று ஊர்வல உற்சவத்தை முடிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

* ஸ்ரீபாத பொறுப்பதிகாரியினால் பெயர் குறிப்பிடப்படுகின்ற வாகனத்திற்கு ஊர்வலத்தில் முக்கியத்துவம் அளிக்கப்படுவதோடு, வரிசைப்படுத்தலுக்கு இடைஞ்சல் இல்லாது, ஊர்வலத்தில் பங்கேற்கின்ற ஏனைய வாகனங்கள் அதன் பின்னர் பயணம் செய்ய வேண்டும்.

2. விகாரைத் தளத்தில் வியாபாரம் செய்வது தடைசெய்யப்பட்டுள்ளது. பிரதான வீதிகளில், பிரதான வீதிகளில் இருந்து ஸ்ரீபாத விகாரை வரை இடை வீதிகளில் வியாபாரம் செய்வது மற்றும் தன்சல் நடத்துவது, பக்தர்களுக்கும் ஊர்வலத்துக்கும் இடைஞ்சல் ஏற்படாது செயல்பட வேண்டும்.

3. பெல்மடுல்ல நகரத்தில் இருந்து ஸ்ரீபாத பூமி வரை நன்கொடைகள் அறவிடுவது உதவிப் பணங்களைச் சேகரிப்பது தடைசெய்யப்பட்டுள்ளது.

4. பிரதான வீதியில் இருந்து ஸ்ரீபாத பூமி வரை வீதியில் ஊர்வலம் மற்றும் பக்தர்களுக்கு இடைஞ்சல் ஏற்படும் வகையில் தனியார் வாகனங்களை நிறுத்திவைப்பது தடை செய்யப்பட்டுள்ளது.

5. விகாரைப் பூமியில் சுற்றி வரைவுள்ள வீதிகளில் விளக்கு மற்றும் மேலதிக விளக்குகளைப் பொருத்துவது இலங்கை மின்சார சபைக்கும் மற்றும் பெல்மதுல்ல பிரதேச சபைக்கும் பாரப்படுத்தப்பட்டுள்ளது.

6. ஊர்வல உற்சவத்திற்கு முன்னர் மற்றும் மிருக சுகாதார அலுவல்கள், சுகாதாரப் பாதுகாப்பு அலுவல்கள் மற்றும் கழிவுப் பொருட்களை அகற்றுவதற்கு பெல்மதுல்ல பிரதேச சபைக்கு மற்றும் சுகாதார வைத்திய அதிகாரிகள் காரியாலயத்துக்கும் பாரப்படுத்தப்பட்டுள்ளது.

7. பக்தர்களுக்குத் தேவையான குடிநீர், மேலதிக தண்ணீர்த் தாங்கிகள் மூலம் நீர் வழங்குவதற்கு நீர் வழங்கும் சபையின் பிரதேச காரியாலயத்துக்குப் பாரப்படுத்தப்பட்டுள்ளது.

8. சகல பாதுகாப்பு அலுவல்களும், ஊர்வலத்துக்கு மற்றும் பக்தர்களுக்கு இடைஞ்சலில்லாது வீதிகளில் வாகனங்களை ஒழுங்குபடுத்துவது பாதுகாப்புப் பிரிவிக்கும் மற்றும் பொலிசுக்கும் பாரப்படுத்தப்பட்டுள்ளது.

9. ஸ்ரீபாத தளத்தில் 6 மாத காலம் புனித வணக்கங்கள் மற்றும் புத்த பூஜைகள் நடாத்தப்பட்டு எதிர்வருகின்ற வெசாக் போயா தினத்துக்குப் பின்னர் கல்பொத்தாவெல ரஜமகா விகாரையில் மகாதேவ மாளிகையில் தரித்து வைக்கப்பட்டு புத்த பூஜைகள் நடாத்தப்படும் அத்தினம் வரை உரிய விடயம் 8 இற்கு உரிய கட்டளைக்கு இணங்கச் செல்லுபடியாகும்.

பி. எஸ். ஜீ. ருவன்சிரி,
பிரதேச செயலாளர்,
பெல்மதுல்ல.

12-586

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.